# கீழக்கரை நகர்மன்ற 31.12.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் –1

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண் WP No: 31941/2018 நாள் 04.04.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 19775/ஜே2/2019–3 நாள் 15.12.2020–ன் படியும் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சிக்குட்பட்டுள்ள பகுதிகளில் உள்ள முடிதிருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் ஆகிய கடைகளுக்கு தொழில் உரிமம் பெற்றுக்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி கடைகளுக்கு தொழில் உரிமம் பெற்றுக்கொள்ள அறிவிப்பு வழங்கவும் தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்யவும் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

(ந.க.எண் 477/2020/ எச்1)

**அலுவலக குறிப்பு**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண் WP No: 31941/2018 நாள் 04.04.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 19775/ஜே2/2019–3 நாள் 15.12.2020 –ன் படியும் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்.805 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் –2</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 முகைதீன் ஜும்மா மஜ்ஜித் புதுகிழக்கு தெரு அருகில் LED மின் விளக்கு ரூ. 5.00 லட்சத்திற்கு அமைக்கும் பணி செய்வதற்கு, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர், அவர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களின் கடிதம் ந.க.எண். ஆர்4/2075/2020, நாள்.01.10.2020–ன் படி தெரிவிக்கப்பட்டது. மேலும், மேற்காணும் பணிகளை செயல்படுத்தும் விதமாக நிர்வாக அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக 2020–2021 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட அரசு வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, மதிப்பீடுகள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி இந்நகராட்சி பொறியாளர்களால் கீழ்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்து 06.11.2020–ந் தேதிய இவ்வலுவலகம் மூலம் நிர்வாக அனுமதி கோரிய கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | கீழக்கரை வார்டு எண்.3 முகைதீன் ஜும்மா மஜ்ஜித் புதுகிழக்கு தெரு அருகில் LED மின் விளக்கு அமைத்தல். | 5,00,000/– |

அதனை தொடர்ந்து 2020–2021 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் நிதியிலிருந்து மேற்காணும் பணிகளை செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணை ந.க.எண். ஆர்4/2075/2020, நாள்.24.12.2020–ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 619/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் அவர்களின் ந.க.எண். ஆர்4/2075/2020, நாள்.24.12.2020–ந் தேதிய செயலாணை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. 2020–2021 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் நிதியிலிருந்து மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.807 அனுமதிக்கப்பட்டது</u>**

பொருள் –3

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, கிழக்குத் தெரு பள்ளிவாசல் (ஆட்டோ ஸ்டாண்ட்) அருகில் அமைந்துள்ள உயர்மின்கோபுர விளக்கு, வார்டு எண்.17 தெற்குத் தெரு வடக்குத் தெரு சந்திப்பில் அமைந்துள்ள உயர்மின்கோபுர விளக்கு மற்றும் வார்டு எண்.15 மேலத்தெரு புதுப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் அமைந்துள்ள உயர்மின்கோபுர விளக்கு ஆகிய மூன்று இடங்களில் உள்ள உயர்மின்கோபுர விளக்குகள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் எரியாமல் இருப்பதாகவும், பொதுமக்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகவும், பள்ளிக்கூடங்கள் மற்றும் இறை வழிபாட்டு தலங்கள் அருகே இருப்பதால் இதை சரி செய்து பொதுமக்களின் உபயோகத்திற்கு கொண்டு வருமாறு நகர்நல தன்னார்வ அமைப்பிடமிருந்தும், அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. ஆகவே, மேற்காணும் மூன்று இடங்களில் உள்ள பழுதான உயர்மின்கோபுர விளக்குகளை (High Mast Light) உரிய முறையில் பழுதுநீக்கம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு, இந்நகராட்சிப் பொறியாளர்களால் மேற்காணும் பழுதான உயர்மின்கோபுர விளக்குகளை நேராய்வு செய்து மின்பணியாளரிடம் அறிக்கை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்காணும் இடங்களில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகள் இந்நகர்ப்பகுதியில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட உயர்மின் அழுத்தம் காரணமாக மின் கசிவு ஏற்பட்டு பழுதாகி பல நாட்களாக எரியாமல் உள்ளதை தொடர்ந்து, பழுதான உயர்மின் கோபுர விளக்குகளில் உள்ள 400 W MHL மின் விளக்குகளை மாற்றி புதிதாக 150 W LED விளக்குகளாக மாற்றி அமைப்பதன் மூலம் மின் பயன்பாடு கட்டணம் குறைவாகவும், 400 W MHL மின் விளக்குகள் பழுது பார்க்கும் செலவினங்கள், புதிதாக 150 W LED விளக்கு அமைக்கும் செலவினத்தை விட கூடுதல் செலவு ஏற்படும் என்பதாலும், 150 W LED உயர்மின் கோபுர விளக்கு விளக்குகளை பராமரிக்கும் பணி செய்வதற்கு எளிதாகவும் இருக்கும் என்றும் பொறியாளர்களிடம் கலந்து ஆலோசனை செய்யப்பட்டுள்ளதாக இவ்வலுவலக மின்பணியாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 கிழக்குத் தெரு, வார்டு எண்.15 மேலத்தெரு மற்றும் வார்டு எண்.17 வடக்குத் தெரு ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ. 3,00,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 761/2020/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொதுமக்களின் நலன் கருதி மூன்று இடங்களில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகள் பராமரிக்கும் பணி செய்வதற்கு ரூ.3,00,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.808 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் –4</u>**

2020–2021 –ஆம் ஆண்டிற்கான தன்னிறைவு திட்டம் செயல்படுத்தும் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.196, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை நாள்.20.12.2020–ன்படி, மேற்படி திட்டத்தில் கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு வழிகாட்டு நெறிமுறைகள் மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் (ந.க.எண்.ஆர்.4/5772/2020,நாள். 07.12.2020 வரப்பெற்றுள்ளது.
மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.769/இ1/2020)

<u>அலுவலகக் குறிப்பு:</u>
2020–2021 –ஆம் ஆண்டிற்கான தன்னிறைவு திட்டம் செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.809 அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் –5</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பினை தொடர்ந்து கீழக்கரையை தலைமையிடமாக கொண்டு தனி வட்டம் அமைத்து அதற்கான வட்டாட்சியர் அலுவலகம் கீழக்கரை நகராட்சி அலுவலகத்தின் தரைதளம் மற்றும் மேல்தளம் ஆகியவற்றில் உள்ள பகுதிகளை தேர்வு செய்து, இந்நகராட்சி அலுவலக கட்டிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 14.03.2015–ம் தேதி முதல் கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வந்த நிலையில், தமிழக அரசின் அறிவிப்பின்படி, கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டப்பட்டு கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகம் வேறு இடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வந்த தரைதளத்தில் பொதுசுகாதாரம் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வந்த பகுதிகளில் மராமத்து பணி, Genset மூலம் மின்சாரம் செல்வதற்கு வயரிங் செய்யும் பணி மற்றும் கழிவறை மராமத்து பணிகள் மேலும் இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முன்னாள் சேர்மன் அறை மற்றும் இதர பழுது நீக்கப் பணிகள் ஆகியவை செய்ய வேண்டிய அவசியமாகிறது.

ஆகவே, மேற்காணும் பணிகளை செய்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.5,00,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.783 /2020/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. இந்நகராட்சி அலுவலகத்தில் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வந்த பகுதிகள் மராமத்து பணி, Genset மூலம் மின்சாரம் செல்வதற்கு வயரிங் செய்யும் பணி, கழிவறை மராமத்து பணிகள், முன்னாள் சேர்மன் அறை மராமத்து மற்றும் இதர பழுது நீக்கப் பணிகளின் அவசியம் கருதி ரூ. 5,00,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.811 அனுமதிக்கப்பட்டது</u>

<u>பொருள் —6</u>

கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் குழல் விளக்குகள்—135, உயர்மின் கோபுரம் 9 எண்ணம் விளக்குகளில் பொருத்தப்பட்டுள்ள 108 விளக்குகள், சோடியம் விளக்குகள்—154, CFL விளக்குகள்—627, LED 25w விளக்குகள்—242 ஆக மொத்தம் 1266 எண்ணம் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை இந்நகர் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு இந்நகராட்சிக்கு ஒரே ஒரு மின் பணியாளர் மற்றும் ஒரு மின்பணி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீரேற்றம் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களையும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 3 எண்ணம் கழிவு நீரேற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை நல்ல முறையில் பராமரிப்பு பணிகளும் செய்ய வேண்டியுள்ளது. இப்பணி செய்வதற்கு இந்நகராட்சியில் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. ஆகையால் மேற்காணும் பராமரிப்பு பணிகளை கூடுதலாக ஒரு நபரைக் கொண்டு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலன் கருதி மேற்படி மேற்கண்ட பணிகளான தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 269 நாள்.30.11.2017 மற்றும் 308 நாள்.29.01.2018—ன்படி வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2020 முதல் 31.01.2021 வரை ஆறு மாதங்களுக்கு தற்போது ஒரு நபரைக் கொண்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாக ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.100 Electrical Helper for Maintenance of Street Light பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.497/– வீதம் இந்நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகளை ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.1,01,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகராட்சி நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி, தெரு விளக்குகளை பராமரிப்பு குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டார்கள் / ஆயில் என்ஜின்கள் பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.795/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.1,01,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.813 அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் –7</u>**

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020–21 ஆம் ஆண்டு (Tied Grant to Non Million Plus Cities for the year 2020-21) முதல் மற்றும் இரண்டாம் தவணைகளின் மானியம் ஒதுக்கீடுகளுக்கு பணிகள் தேர்வு செய்து கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 29.12.2020–ந் தேதிய மின்னஞ்சல் (E-mail) மற்றும் தொலைபேசி செய்தியில் (Telephone message) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை சேர்த்து கையாள புதிதாக ரூ. 3.72 கோடி மதிப்பீட்டில் தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையிலான ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) தனியார் பங்களிப்பு அடிப்படையில் ((Public Private Partnership Mode) அமைத்தல். | 70.00 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் | 6.75 |

| | | |
|---|---|---|
| | வாங்குதல் (Light Commercial Vehicle 4 Wheeler Tipper Auto) | |
| 3. | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி (Construction of Compound Wall at OHT area) | 12.75 |
| | மொத்தம் | 89.50 |

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020–21 ஆம் ஆண்டு மானிய ஒதுக்கீடுகளுக்கு ரூ.89.50 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(கோப்பு எண். 610/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை 2020–21 ஆம் ஆண்டு முதல் மற்றும் இரண்டாவது மானிய ஒதுக்கீடுகளில் மேற்காணும் விவரப்படியான மூன்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை 2020–21 ஆம் ஆண்டு முதல் மற்றும் இரண்டாவது மானிய ஒதுக்கீடுகளில் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைளை சேர்த்து 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) அமைக்கும் பணி இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளவும், அதற்கான இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை கீழக்கரை நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், இப்பணியின் மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் (இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம் மற்றும் கீழக்கரை) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் பொருட்டு வரிசை எண்.1ல் கண்டுள்ள பணிக்கு உரிய அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வழிமுறையாக கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டு முதல் மற்றும் இரண்டாவது மானிய ஒதுக்கீடுகளில் இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்கும் வரிசை எண்.2–ல் கண்டுள்ள பணிக்கு உரிய அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வழிமுறையாக கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
4. 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டு முதல் மற்றும் இரண்டாவது மானிய ஒதுக்கீட்டை விட மேற்காணும் பணிகள் செய்வதற்க ஆகும் கூடுதல் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.814 அனுமதிக்கப்பட்டது</u>**

**பொருள் –8**

கீழக்கரை நகராட்சியில் தினசரி 18 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 11 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1 எண்ணிக்கையிலான பசுமை உரக்குடில் (Micro Composting Centre) மற்றும் 6 எண்ணிக்கையிலான சிறிய வகை உரக்குடிலிகள் மூலமாக (Onsite Composting centre) கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இதுதவிர சுமார் 7 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) சுமார் 5.5 மெட்ரிக் டன் அளவுள்ள உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/s. Dalmia, சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்படவில்லை உள்ளிட்ட இதர காரணங்களை தெரிவித்து சிமெண்ட் ஆலை வாங்க மறுக்கும் நிலையில் மக்காத குப்பைகள் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக சுமார் ரூ.16000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள (Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்னை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள இராமநாதபுரம், பரமக்குடி, மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator)யை தனியார் பங்களிப்பு அடிப்படையில் (Public Private Partnership Mode) செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு ரூ.350.00 இலட்சத்துக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டதின் கீழ் பங்கெடுத்துக்கொள்ளும் நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும், திட்டத்தினை செயல்படுத்திட கீழக்கரை நகராட்சியின் பங்குத் தொகை ரூ.70.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பங்குத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | ரூ.350.00 | 70.00 |
| 2 | இராமநாதபுரம் | | 80.50 |
| 3 | பரமக்குடி | | 140.00 |
| 4 | இராமேஸ்வரம் | | 59.50 |
| | | **மொத்தம்** | **350.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவியவுடன் கீழக்கரை நகராட்சியில் உருவாகும் மக்காத குப்பைகளை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை கீழக்கரை நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார

முறையில் பகிரிந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**(கோப்பு எண். 610/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15–வது மத்திய நிதிக்குழு மான்ய தொகையிலிருந்து செயல்படுத்தவும் இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகள் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளவும், தொடர் பராமரிப்பினை தனியார் மூலம் செயல்படுத்துவதை கீழக்கரை நகராட்சி கண்காணிப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.815 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் –9**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 முகைதீன் ஜும்மா மஜ்ஜித் புதுகிழக்கு தெரு அருகில் LED மின் விளக்கு ரூ. 5.00 லட்சத்திற்கு அமைக்கும் பணி செய்வதற்கு, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர், அவர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களின் கடிதம் ந.க.எண். ஆர்4/2075/2020, நாள்.01.10.2020–ன் படி தெரிவிக்கப்பட்டது. மேலும், மேற்காணும் பணிகளை செயல்படுத்தும் விதமாக நிர்வாக அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக 2020–2021 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட அரசு வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, மதிப்பீடுகள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி இந்நகராட்சி பொறியாளர்களால் கீழ்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்து 06.11.2020–ந் தேதிய இவ்வலுவலகம் மூலம் நிர்வாக அனுமதி கோரிய கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | கீழக்கரை வார்டு எண்.3 முகைதீன் ஜும்மா மஜ்ஜித் புதுகிழக்கு தெரு அருகில் LED மின் விளக்கு அமைத்தல். | 5,00,000/– |

அதனை தொடர்ந்து 2020–2021 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் நிதியிலிருந்து மேற்காணும் பணிகளை செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணை ந.க.எண். ஆர்4/2075/2020, நாள்.24.12.2020–ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 619/2020/இ1)

**அலுவலக குறிப்பு**

1. இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் அவர்களின் ந.க.எண். ஆர்4/2075/2020, நாள்.24.12.2020–ந் தேதிய செயலாணை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. 2020–2021 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் நிதியிலிருந்து மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.816 அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் –10</u>

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் தற்போது ஏற்கனவே கொட்டப்பட்ட பழைய குப்பைகள் அகற்றப்பட்டு புதியதாக நுண் உரம் தயாரிக்கும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தால் அப்பகுதியில் சமூக விரோதிகள் சிலர் உரக்கிடங்கு உள்ளே சென்று கட்டுமானங்கள் மற்றும் அங்குள்ள பொருட்களை உடைத்து சேதம் விளைவித்து சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆகவே, உரக்கிடங்கிற்கு உள்ளே யாரும் நுழையாத வண்ணம் நுண்உரம் செயலாக்க மையத்தை காக்கவும், அவ்விடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஆகவே, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ. 8,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.
<u>(கோப்பு எண். 782 /2020/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, அப்பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.8,50,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.817 அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் –11</u>

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில், நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் 2 PPM அளவுக்கு குளோரின் இருக்க வேண்டும் எனவும், தற்போது டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், நகராட்சிப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டத்தினை (Gas/Liquid Chlorination System) செயல்படுத்துமாறு தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால், மேற்காணும் ஆய்வு கூட்ட அறிவுரைக்கிணங்க, இந்நகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீரின் அளவு 2 PPM இருக்கும் பொருட்டு, இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (OHT) அமைத்துள்ள வளாகத்தில் திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டம் (Liquid Chlorination System) செயல்படுத்தும் பொருட்டு, மேற்கண்ட இடத்தில் குளோரின் திரவம் கலந்து குடிநீர் விநியோகம் செய்யும் குளோரினேஷன் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு 7280 லிட்டர் குளோரின் திரவம் தேவையாக உள்ளது. அதன் அடிப்படையில் ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2020–2021 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலை விகிதப் பட்டியலில் (Schedule of Rate) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாததால் உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு 28.12.2020–ந் தேதி பொறியாளர்களால் அனுமதி கோரி அறிக்கை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 785/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு.</u>

இந்நகர்மக்களின் நலன் மற்றும் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஹைப்போ குளோரின் திரவம் இந்நகராட்சிக்கு விநியோகம் செய்வதற்குரிய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.818 அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் –12</u>

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்படி கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. எனவே, பொது சுகாதார நலன் கருதி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்கள் மேற்படி பணிகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலன் கருதி மேற்படி பணிகளான கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். 269 நாள்.30.11.2017 மற்றும் 308 நாள்.29.01.2018–ன்படி வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2020 முதல் 31.01.2021 வரை ஆறு மாதங்களுக்கு தற்போது ஆறு நபர்களைக் கொண்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு, மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(b) Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ520/– வீதம் கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களை வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.6,30,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் ஆறு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021 வரை பணி செய்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.794/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கும் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஆறு நபர்களை வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.6,30,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.819 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**